# தவக்காலம் 4ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இன்றைய தவக்காலம் நான்காம் ஞாயிறு வழிபாடு இறைவனின் வழிநடத்துதலின்படி வீட்டுக்குள் நுழையுமாறு அழைப்பு விடுக்கின்றது.

பாவம் செய்தோம் என்பதை உணர்ந்து, வருந்தி, அவற்றை அறிக்கையிட்டு மனமாற்றம் அடையும் போது இறைவன் அனைத்து நலன்களால் முடிசூட்டுவார் என்பதை உணர்ந்து கொள்ள இவ்வழிபாடு நம்மை அழைக்கின்றது.

இன்றைய முதல் வாசகத்தில், அடிமைகளாய் எகிப்தில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களை பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு அழைத்து வந்து, இதுவரை நாடோடிகளாய் வாழ்ந்து, வானிலிருந்து வந்த மன்னாவை உண்டு வந்த மக்களுக்கு நிலத்தைத் தந்து, அதில் விவசாயம் என்னும் தொழிலை தந்து ஆசீர்வதிக்கின்றார் இறைவன். தங்களின் கைகளால் விளைவித்த தானியத்தை உண்ண ஆரம்பித்ததும் இறைவன் மன்னாவை நிறுத்தினார் எனப் பார்க்கின்றோம்.

இரந்து கேட்பவனுக்கு சோறு போட்டு

சோம்பேறி ஆக்குவதை விட

நெல்மணியைக் கொடுத்து உழைப்பைக்

கற்றுத் தருவதே சிறந்தது.

கடும் உழைப்பையும் உழவுத் தொழிலையும் வெறுக்காதே என்கின்றது விவிலியம். இறைவன் கற்றுத் தந்த வேளாண்மை இன்று நாகரிகம் என்னும் பெயரால் நசுக்கப்படுகிறது. விவசாயி கழுத்து நெரிக்கப்படுகின்றதே! சிந்திப்போம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், "அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்" என்று மனம் திரும்பும் இளைய மகனை ஆடை அணிகலன்களால் அலங்கரிப்பதைப் பார்க்கின்றோம். இறைவன் தண்டிப்பவர் அல்ல; மன்னிப்பவர். பாவமே எனினும் அதிலிருந்து மனம் திரும்பும் போது மன்னிப்பும் அதைத் தொடர்ந்து மகத்துவமான வாழ்வும் வந்தடையும்.

எனவே உலக காரியங்கள் நம்மை இறைவனிடம் இருந்து தொலைதூரம் ஆக்கியிருந்தால், நவநாகரிக வாழ்வில் நாம் காணாமல் போயிருந்தால் இன்றே வீடு திரும்புவோம். இத்தவக்காலத்தில் உழைப்பின் மேன்மையும், உலக காரியங்களில் காட்டவேண்டிய முனைப்பைவிட கடவுளிடம் செலவிடும் நேரத்தை அதிகப்படுத்த வேண்டிய அவசியத்தினையும் உணர்ந்து கொள்ள இத்திருப்பலியில் வரம் வேண்டி ஜெபிப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. ஒப்புரவால் எம்மை உம்மோடு இணைப்பவரே!

ஒப்புரவை அருளும் எம் திரு அவை உம்மோடு நிலைத்திருந்து, தங்களின் இயல்பை புதுப்பித்து, மக்கள் மனங்களில் நல்வித்து விதைக்கும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தும் வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

2. நிலத்தின் விளைச்சலை இஸ்ரயேல் மக்கள் உண்ண அருள்புரிந்தவரே!

நாங்கள் உழைப்பிற்கேற்ற விளைச்சலைப் பெறவும், வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் நாட்டை ஆள்வோர் திட்டங்களை செயல்படுத்தவும், இயற்கையின் மேன்மையை உணர்ந்து, இயற்கையை வளப்படுத்த தேவையான ஞானம் அருள வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

3. தந்தையே கடவுளுக்கும் உமக்கும் எதிராகப் பாவம் செய்தேன் என வருந்திய இளைய மகனைப் போல இவ்வுலக மாய கவர்ச்சிக்குள் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கும் இளைய சமுதாயம், தங்கள் வழிகளை சரிப்படுத்தி படைப்பின் மேன்மையை உணர்ந்து இறைவனுக்குரிய பாதையில் நடக்கும் வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

4. நற்செய்தியில் கண்ட மூத்த மகன் போல் சட்டம், ஒழுங்கு, மரபு என்பவற்றுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை மட்டும் கண்ணோக்காமல் அன்பு, இரக்கம், மன்னிப்பு ஆகியவற்றை நினைவில் கொண்டு உம் இல்லம் திரும்ப மனமாற்றம் தர வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

5. கருணையின் மழையே எம் இறைவா!

கோடை கொந்தளிக்கும் இவ்வேளையில் எங்களுக்கு போதிய மழையை நீ தரவும், குடும்ப அமைதி, சந்தோஷம் நிறைந்திருக்கவும், மக்களின் உள்ளத்தின் வேண்டுதல்கள் இறைவனால் நிறைவேற்றப்படவும் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com